அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :98/2017

தேதி : 18/09/2017

**சர்தார் சரோவர் அணை நாட்டிற்கு அர்ப்பணிப்பு**
**பிரதமர் நரேந்திர மோடிக்கு**
**சமத்துவ மக்கள் கட்சி தலைவர் திரு.ஆர்.சரத்குமார் அவர்கள் பாராட்டு**

நாட்டிலேயே மிகப் பெரியதும், உலகிலேயே இரண்டாவது மிகப்பெரியதுமான சர்தார் சரோவர் அணையை நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி அர்ப்பணித்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது.

நர்மதா ஆற்றின் குறுக்கே 6,406 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கும் இந்த அணையால், குஜராத், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், மஹாராஷ்டிரா மாநிலங்கள் பயனடையும், சுமார் 19 லட்சம் ஹெக்டேர் பாசன வசதி பெறும், ஒன்பதாயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களின் குடிநீர்த்தேவை பூர்த்தியாகும், மொத்தமாக 1450 மெகா வாட் மின்உற்பத்தி செய்யப்படும் என்ற வகையில் மிக உன்னதமான இத்திட்டம் வளர்ச்சிக்கு வித்திடும் என்பதில் ஐயமில்லை.

பலவித போராட்டங்களைத் தாண்டி இத்திட்டம் முழுமை பெற்று பயன்பாட்டிற்கு வந்திருக்கும் இவ்வினிய வேளையில், நதிகளைத் தேசியமயமாக்குவது குறித்தும்,நதிகளின் இணைப்பு குறித்தும் விரைந்து திட்டமிட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தி பிரதமர் அவர்களுக்கு பாராட்டையும், நன்றியையும் சமத்துவ மக்கள் கட்சி சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவன தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com